**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா. 36** **Date : 09.07.2025.**

| | |
|---|---|
| **Name : சேட்டு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குதிரைகாரனூர்புதூர் குடியிருந்து சிவில் கான்ட்ரேக்டர் வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016ம் தேதியன்று சிப்காட்டில் விநாயகர் சிலை கரைப்பதற்காக குதிரைகாரனூரிலிருந்து உப்புபள்ளம் என்ற பகுதிக்கு பிக்கப் வேன் மூலமாக எடுத்து சென்றார்கள். விநாயகர் சிலையை கரைந்து விட்டு பிறகு வரும் போது உப்பு பள்ளம் வனபகுதி அருகே வந்த போது வேகமாக வந்த ஆட்டோவை வளைவில் திருப்பிய போது கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து ஓட்டுநருடைய தவறால் நடந்தது. 06.09.2016ம் தேதி காலை 10.30 மணிக்கு மேச்சேரி போலீசார் சாலை விபத்து நடந்த இடமான உப்புபள்ளம் என்ற பகுதியை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் அழகேசன் இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் எந்த இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் குதிரைகாரனூர்புதூர் ஆகும். சாலை விபத்து நடந்த வாகனத்தில் நான் இல்லை என்றால் ஆமாம். நான்

விபத்தை பற்றி கேள்விப்பட்டேன் என்றால் நேரடியாக பார்த்தேன். அந்த பகுதியில் விபத்து நடந்த போதே காவல் துறையினர் நின்று கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். அந்த வண்டியில் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்றால் சுமார் 15 பேர் பயணம் செய்தார்கள்.

3) என் வீட்டு வழியாக வாகனம் சென்றதால் என்னால் 15 நபர்கள் சுமாராக சென்றதாக சொல்லமுடியும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் மாலை 7.30 மணிக்கு தான் காவல் துறையினர் அங்கு வந்தனர் என்றும் அப்போது நானும் அழகேசனும் நின்ற போது காவல் துறையினர் அங்கு வந்து இரவு நேரத்தில் வரைபடம் வரைந்தார்கள் என்றும் அப்போது தான் நான் அங்கிருந்தேன் என்றும் காலை நேரத்தில் நான் அங்கில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த போது காவல் துறையினர் சம்பவயிடத்தில் இருந்தனர் என்றால் சரியல்ல.

4) நான் காவல் துறையிடம் மாலை 07.30 மணிக்கு கொடுத்த வாக்குமூலம் தவறு என்றால் சரிதான். 06.09.2016ம் தேதி மாலை 7.30 மணிக்கு என்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லை என்றால் காலையிலும் விசாரித்தார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதால் அவர்கள் சம்பவயிடம் வந்த போது பார்வை மகஜரில் கையொப்பமிட்டேன் என்றால் வரைபடத்தை வரைந்த போது கையொப்பம் செய்தேன். அதிகமான பாரம் ஏற்றியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் ஓட்டுநர் அவ்வாறு ஏற்றியிருக்கக்கூடாது.

5) சிலையை கரைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அதிகமான நபர்களை ஏற்றியதால் தான் இவ்விபத்து நடந்தது என்றால் ஆமாம். ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் ஓட்டுநர் தவறால் தான் விபத்து நடந்தது. என்னால் ஓட்டுநர் தவறால் தான் விபத்து நடந்ததாக தெளிவாக சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியும். கட்டுப்பாடு கிடைக்காததால் தான் விபத்து நடந்தது. ஓட்டுநரின் கவனக்குறைவு, அதிவேகமாக வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக

என்னால் சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியும். எவ்வளவு வேகத்தில் வந்தார் என்றால் 60 கிலோமீட்டர் வேகத்தில் வந்தார். நான் வேகத்தை எவ்வாறு கணக்கிட்டேன் என்றால் வண்டி வரும் வேகத்தை வைத்து சொன்னேன். நான் ஸ்பீடோ மீட்டரை பார்த்து வேகத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.